1969 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) கிருஷ்ணராய புரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டிடம் கட்ட தீர்மானம் எதுவும் நிறைவேற்ற வில்லை. இது விஷயமாக ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் எவ்வித மதிப்பீடும் தயார் செய்யப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் வடுகப்பட்டிக்குச் சென்றிருந்த நேரத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காகத் தோண்டப் பட்ட அஸ்திவாரத்தையே பொதுமக்கள் என்னிடம் காட்டினார் கள். அமைச்சர் அவர்களுக்கு ஒன்றியத்திலிருந்து வேறு தகவல் வந்திருப்பதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் இதுபற்றி மீண்டும் விசாரித்து அறிக்கை அனுப்பக் கோருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எந்த விதமான மதிப்பீடும் தயார் செய்யாமல், அனுமதியும் பெறுமலேயே பாலராஜபுரம் ஊராட்சித் தலைவர் 1963-64-ல் அஸ்திவாரத்திற்கு மண் பறித்திருக் கிறார். அதற்கான செலவு 23 ரூபாய். அவர் அதை அப்படியே விட்டு விட்டுப் போய்விட்டார். இப்போது கட்டடம் இல்லாமல் பொதுச்சாவடியில் நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஒன்றியத்தின் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வற்புறுத்தலாம்.

Peace Corps volunteers

* 297 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether a number of (i) men and (ii) women peace corps volunteers are to take up assignments in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

பரசலூர், செம்பனார் கோயில் ஊராட்சி மன்றங்களின் இணைப்பு

*298 வினா—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிப்புக்கு உள்ளடங்கிய பரசலூர், செம்பனார்கோயில் ஊராட்சி மன்றங்களிலிருந்து, குறிப் பிட்ட இரண்டு ஊராட்சி மன்றங்களையும் இணைத்து பேரூராட்சி மன்றமாக அமைக்கக் கோரி விண்ணப்பம் எதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?